# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1914/2 - 2015 මැයි මස 11 වැනි සඳුදා - 2015.05.11

*1914/2 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தின் மூலமும் திருத்தம் செய்யப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (3), 14 மற்றும் 20 ஆம் பிரிவுகளின் மூலம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், விதிக்கப்பட்ட கீழே காணப்படுகின்ற வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

எஸ். பீ. வெள்ளப்பிலி,
திறைசேரிப் பிரதிச் செயலாளர்.

*நிதி அமைச்சு,*
*கொழும்பு,*
*2015, மாச்சு 02.*

*வர்த்தமானி அறிவித்தலை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுதல்*

1. *இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் அனுமதிப்பத்திரம் மற்றும் அது தொடர்பான பற்றுவைத்தலை புதிய திருத்தத்திற்கு உட்படுத்தி வெளியிடப்பட்ட 2014.07.21 ஆந் திகதிய 1872/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், 2014.09.10 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது எனவும்,*

2. *பெற்றோலிய உற்பத்தியின் கீழ் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், ஆகாய விமானத்திற்கான எண்ணெய் மற்றும் தார் சம்பந்தமான இறக்குமதி அனுமதிப்பத்திரக் கட்டணத்தை திருத்தத்திற்கு உட்படுத்தி வெளியிடப்பட்ட 2014.09.30 ஆந் திகதிய 1882/5 ஆம் இலக்க அதி விசேட வத்தமானி அறிவித்தல் 2014.11.24 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது எனவும்,*

3. *இயையுபடுத்தப்பட்ட வகைப்படுத்தல் குறியீட்டிலக்கம் 03.02, 03.02.89, 03.03 மற்றும் 03.03.89 இலங்கைக்குள் லின்னா மீன்களின் இறக்குமதியைச் சம்பூரணமாகத் தடை செய்து வெளியிடப்பட்ட 2014.10.02 ஆந் திகதிய 1882/40 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2014.11.24 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது எனவும்,*

4. *இயையுபடுத்தப்பட்ட வகைப்படுத்தல் குறியீட்டிலக்கம் 0701.90 இன் கீழ் புதிய அல்லது குளிரூட்டப்பட்ட உருளைக் கிழங்கு இறக்குமதியை இடைநிறுத்தி வெளியிடப்பட்ட 2014.10.10 ஆந் திகதி 1883/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2014.11.24 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது எனவும்,*

5. *சில மோட்டார் வாகனங்கள் சம்பந்மாக இயையுபடுத்த்ப்பட்ட வகைப்படுத்தல் குறியீட்டிலக்கத்தில் திருத்தங்களை மேற்கொண்டு வெளியிடப்பட்ட 2014.10.24 ஆந் திகதிய 1885/50 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2014.11.24 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது எனவும்.*

*5 - 642*




*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*